# NSW HEALTH

## COVID-19 Key Points – Monday 27 September 2021

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 85.5%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 60.1%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. 12-15 வயதுடையவர்களில் 40% ஆனோர், தடுப்பூசியின் முதல் மருந்தளவைப் பெற்றுள்ளனர். தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட உங்கள் அனைவருக்கும் நன்றி!
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 787 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். மிகவும் கவலைக்கிடமாக, மேலும் பன்னிரெண்டு பேர் இறந்துள்ளனர்.
- தயவுசெய்து எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக உங்கள் தடுப்பூசிக்கு nsw.gov.au-இல் பதிவு செய்து, உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு உதவுங்கள். குறிப்பாக 16-39 வயதுடையவர்களை, முன் வந்து தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம்.
- தடுப்பூசியின் இரட்டை மருந்தளவுகளைப் பெறும் எமது 70% இலக்கை அடைந்த பின்னர், அக்டோபர் 11 அன்று நியூ சவுத் வேல்ஸ் திறக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அக்டோபர் இறுதிக்குள் நாம் 80%-ஐ அடைய வேண்டும்.
- மீள் திறப்பின் மூன்றாவது கட்டம், டிசம்பர் 1 ஆம் திகதி இடம்பெறும். இந்தக் காலகட்டமளவில், 90% ஆன வயதுவந்தவர்கள் தடுப்பூசியைப் பெற்றுகொண்டிருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். தடுப்பூசியைப் போட்டுக்கொண்டவர்களுக்கும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளாதவர்களுக்கும் கட்டுப்பாடுகள் இலகுவாக்கப்படும்.
- தரவு மாதிரி (modelling) பரிந்துரைத்த அளவுக்கு, மருத்துவமனையில் மக்கள் சேர்க்கப்படும் அளவு அதிகமாக இல்லை, ஆனால் எங்கள் அமைப்பானது தொடர்ந்தும் அதிக அழுத்தத்தின் கீழ் இருக்கும். எங்கள் சுகாதாரப் பணியாளர்களை ஆதரிக்க, நாம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.
- ஹண்டர் (Hunter), இல்லவரா (Illawarra) மற்றும் மத்திய கரையோரம் (Central Coast) ஆகிய பகுதிகளில், நோய்த்தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாங்கள் காண்கிறோம். தயவுசெய்து தொடர்ந்தும் வெளியே வந்து பரிசோதனையைச் செய்துகொள்ளவும். சமூகத்தில் உள்ள நோய்த்தொற்றாளர்களை, முடிந்தவரை நாம் கண்டறிவது மிகவும் முக்கியம்.
- நாங்கள் முன்னர் இருந்த நிலையிலிருந்து நாம் இப்போது வந்தடைந்துள்ள நிலை வரைக்கும், நியூ சவுத் வேல்ஸ் மக்கள் ஒரு அற்புதமான முடிவை அடைய ஒன்றுபட்டு நின்றுள்ளனர்.